மயிலாடுதுறை முதன்மைக் கல்வவி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு.பெ. அம்பிகாபதி,எம்.எஸ்.சி,எம்.எட்.,எம்.பில்.,

நக.எண் 912/ அ1/2024 நாள் 26.06.2024

பொருள் : தமிழ்நாடு பள்ளிக்கல்வி - அமைச்சுப்பணி - மயிலாடுதுறை மாவட்டம் - சந்திரப்பாடி அரசு உயர்நிலைப் பள்ளியின் இளநிலை உதவியாளர் திரு.இரா.செல்வக்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - சார்பாக.

பார்வை :
1.மயிலாடுதுறை, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 304/அ1/2023 நாள் 04.08.2023
2.சந்திரப்பாடி, அரசு உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியரின் ந.க.எண்.14/2024 நாள்- 20.02.2024
3. மயிலாடுதுறை, மாவட்டக் கல்வி அலுவலரின் (இடைநிலைக் கல்வி) ந.க.எண் 1160/அ1/2024, நாள் 28.03.2024

......................

பார்வை 1இல் காணும் செயல்முறைகளின்படி திரு.இரா.செல்வக்குமார் என்பார் பதிவறை எழுத்தர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டு 04.08.2023 பிற்பகல் சந்திரப்பாடி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணி ஏற்றுக்கொண்டார்.

பார்வை 2 மற்றும் 3ல் காணும் கடிதத்தின்படி சந்திரபாடி, அரசு உயர்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.இரா.செல்வக்குமார் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வேண்டி பெறப்பட்ட கருத்துருவை பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ. எண் | பெயர்/பதவி/பணிபுரியும் பள்ளியின் முகவரி | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | திரு.இரா.செல்வக்குமார் இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, சந்திரப்பாடி. | 04.08.2023 பிற்பகல் | 05.08.2023 முற்பகல் |

இவ்வாணை குறித்த பதிவுகள் சார்ந்த பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது. பெற்றுக் கொண்டமைக்கு ஒப்புதலை உடன் அனுப்பி வைத்திட சந்திரபாடி, அரசு உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு- பணிப்பதிவேடு அசல் - 1 தொகுதி

முதன்மைக் கல்வி அலுவலர்,
மயிலாடுதுறை.

பெறுநர்- திரு.இரா.செல்வக்குமார், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப் பள்ளி, சந்திரப்பாடி (உரிய வழியாக) மயிலாடுதுறை மாவட்டம்.

நகல்- தலைமையாசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, சந்திரப்பாடி, மயிலாடுதுறை மாவட்டம்.

நகல் : மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), மயிலாடுதுறை.